புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
Peer-Reviewed
ISSN : 2456-821X
UGC CARE LIST
UGC Care Listed Journal (2023 onwards)
Sacred Heart Research Publication, Sacred Heart College, Tirupattur-635601, Tamilnadu, India
Volume : 07, Issue : 01/02 - March 2023

# ஐங்குறுநூற்றில் சொற்புலங்களும் புலச்சொற்களும்

**நெறியாளர்**
**முனைவர் க.அன்பழகன்**
*உதவிப்பேராசிரியர்*
*தமிழாய்வுத்துறை*
*திருவள்ளுவர் அரசு கலைக்கல்லூரி,*
*இராசிபுரம் 637 401.*

**ஆய்வாளர்**
**செ.சுரேஷ்குமார்**
*முழுநேர முனைவர்பட்ட ஆய்வாளர்*
*தமிழாய்வுத்துறை,*
*திருவள்ளுவர் அரசு கலைக்கல்லூரி,*
*இராசிபுரம் 637 401.*

**ஆய்வுச்சுருக்கம்**

*சங்க இலக்கியங்கள் எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, பதிணென் கீழ்க்கணக்கு நூல்கள் என்ற பெரும் பிரிவுகளைக் கொண்ட தொகையாகும். சங்க இலக்கிய எட்டுத்தொகையில் அகம், புறம் என்ற நூல்கள் இருப்பினும் அவற்றில் மூன்றாவதாகத் தொகுக்கப்பட்டுள்ள ஐங்குறுநூற்றில் ஐந்து திணைகளுக்கும் பத்து பத்து பாடல்கள் என ஐந்நூறு பாடல்கள் அமைந்துள்ளது. இவற்றில் உள்ள பாடல்கள் வெவ்வேறு புலவர்களால் வெவ்வேறு காலகட்டங்களில் வெவ்வேறு சூழல்களில் பாடப்பட்டவை. அனைவரும் தமிழர்களாய் இருந்தும் இவர்கள் அனைவரும் வெவ்வேறு காலகட்டத்தைச் சார்ந்தவர்கள். தமிழ் மொழியானது காலத்திற்கு ஏற்ப பல்வேறு வகையாக மாறக்கூடியது. எனவே ஒவ்வொரு புலவரின் சொல்லாட்சித் திறனும் மாறக்கூடியது. சொற்கள் சில சூழல்களில் வேறு பொருள் தரக்கூடியவை. இந்த ஐங்குறுநூற்றில் உள்ள சொற்களைச் சொற்பொருண்மை அடிப்படையில் சொற்புலங்களும் புலச்சொற்களும் என்ற வகையில் ஆராயப்பட்டுள்ளது.*

**முன்னுரை**

*ஓசையால் அமைந்த சொல் மற்றும் எழுத்துக்கள் ஒன்று சேர்ந்து அமைந்ததைச் சொல் எனலாம். எழுத்துக்களை ஒன்றாகச் சேர்த்து சங்கிலி போல் பொருளைத் திரித்து அச்சொற்கள் அனைத்தும் ஏதாவது ஒரு பொருள் உணர்த்தும். ஆனால் அந்தச் சொற்களின் பொருள் முன்பு ஒன்றாக இருந்திருக்கும். ஆனால் தற்போது கால மாற்றத்தினால் வேறு வேறு பொருள்களை*

உணர்த்துவதை மறுக்க முடியாததாகும். தமிழ்மொழியின் தொடக்கத்தில் ஒரு சில சொற்களின் பொருள் விளங்குவது கடினமான ஒன்றாக இருக்கலாம். சொற்களின் பொருள், வெளிப்பாடு, வெளிப்படை மற்றும் குறிப்புப்பொருள் பற்றிய செய்திகள் சொற்களின் பொருண்மை நிலையினை வகைப்பாடு, சொற்பொருள் மயக்கம் அதைத் தீர்ப்பதற்கான வழிமுறைகள் உருபு செயல்பாடுகள் முதலியவை பற்றிய செய்திகள் கூறப்பட்டுள்ளது.

**ஐங்குறுநூறு உள்ளடக்கம்**

எட்டுத்தொகை நூல்களுள் ஐங்குறுநூறானது அகப்பொருள் சார்ந்த ஐந்திணை ஒழுக்கத்தை எடுத்துரைக்கிறது. இந்நூலின் ஒவ்வொரு திணையிலும் பத்து பத்து பாடல்கள் வீதம் "பத்து" என்ற தலைப்புகளில் நூறு பாடல்கள் பாடப்பட்டுள்ளன அந்தப் பாடல்களானது அகவற்பாவாலான மிகக்குறைந்த 3 அடி முதல் 6 அடிகள் கொண்ட ஐந்நூறு பாக்களுடன் விளங்குவதால் ஐங்குறுநூறு என அழைக்கப்படுகிறது. இந்நூலைத் தொகுத்தவர் புலத்துறை முற்றிய கூடலூர் கிழார். தொகுப்பித்தவர் யானைக்கட்சேய் மாந்தருஞ் சேரல் இரும்பொறை என்பர். ஐந்து நூறு பாடல்களிலும் "பத்து" என முடியும் தன்மை கொண்டது. இந்நூலில் கடுமான், குட்டுவன், ஆதன், அவினி, மத்தி, கொற்கைக் கோமான் முதலிய அரசர்களைப் பற்றிய குறிப்புகளும், ஆமூர், தேனூர், கொற்கை, கழார் (காவிரி), தொண்டி முதலான ஊர்ப்பெயர்களும் சுட்டப்பட்டுள்ளன. செடி, கொடி, விலங்கு, பறவைகளின் பெயர்கள் தலைப்புகளாக அமைந்துள்ளதைக் காண முடிகிறது.

**ஐங்குறுநூற்றின் சிறப்புகள்**

ஐங்குறுநூற்றில் ஐந்து திணைகளையும் ஐந்து புலவர்கள்பாடியுள்ளனர்.

***"மருதம் ஓரம்போகி, நெய்தல் அம்மூவன்***
***கருதும் குறிஞ்சிக் கபிலன் கருதிய***
***பாலை ஓதலாந்தை பனிமுல்லை பேயனே***
***நூலை ஓது ஐங்குறுநூறு"*** (1)

என்னும் பாடல் உணர்த்துகிறது.

மருதத்தை முதல் திணையாகக் கொண்ட நூல் இதுவாகும். அதுமட்டுமல்லாமல் எட்டுத்தொகையில் உள்ள அகத்திணை நூல்களுள் இவ்வாறு திணைக்கு ஒரு புலவர் வீதம் பாடுகின்ற நூல்கள் இரண்டு உள்ளன. அவற்றில்

1. ஐங்குறுநூறு மற்றொன்று கலித்தொகை என்பது இதன் சிறப்புகள் ஆகும்.

**புலச்சொல் வரையறை**

ஒரு மொழி இயங்குவதற்கு மிக அடிப்படையாக அமைவது சொற்கள். அச்சொற்கள் பல்வேறு பொருள்கள் பலவற்றை அடங்கிய சொற்தொகுதியாகும். ஒரு பொதுச்சொல்லில் அடங்கும் ஒத்த தொடர்புடைய பல்வேறு சொற்களை ஒரு புலத்தில் அடக்கினால் அவை புலச்சொற்கள் எனலாம். அதுமட்டுமல்லாமல் ஒரு மொழியில் சொற்தொகுதியானது

காலத்திற்கு ஏற்ப மாறுகின்ற தன்மையைக் கொண்டது ஆகும். ஒரு மொழி தனக்கான ஒரு சில சொற்தொகுதியைக் கொண்டு இயங்குகின்றது. மீச்சொல், உட்பொருட்சொல் போன்றவற்றின் அடிப்படையில் அமைந்தவை புலச்சொற்கள். அந்த மொழியில் உள்ள சொற்தொகுதியின் அடிப்படையில் அந்த மொழியின் வளர்ச்சியை அறிய முடிகிறது. அவ்வாறு ஒரு மொழியிலுள்ள சொற்களை பொதுத்தலைப்புகளில் அடக்குகின்ற பொழுது அதில் உள்ள பொருளை பல்வேறு சொற்களைக் கொண்டு ஒரே புலத்தில் அடக்குகின்ற பொழுது புலச்சொற்கள் தோற்றம் பெறுகின்றது.ஒரே புலத்தினுள் அடக்குகின்ற போது அந்தச் சொற்களின் பொருள் விரிவு பெற்றிருப்பது மட்டுமல்லாமல் மற்றொரு பலத்துடன் தொடர்புடையதாகவும் காணப்படுகின்றது.

புலச்சொல் தோற்றம்

கிபி எட்டாம் நூற்றாண்டில் இருந்த திவாகர நிகண்டில் புலச்சொற்கள் பாகுபாடு செய்யப்பட்டுள்ளது. திவாகர நிகண்டில் 2518 நூற்பர்களில் 9500 சொற்கள் பணிரண்டு தொகுதிகளாக விளக்கம் தரப்பட்டுள்ளன. புலச்சொல்லானது எட்டாம் நூற்றாண்டில் பாகுபாடு செய்யப்பட்டிருந்தாலும் அதன் அடிப்படை தமிழ்மொழியின் தொன்மை வாய்ந்த இலக்கண நூலாகிய தொல்காப்பியம் எடுத்தியம்புவது முதன்மை ஆகும்.

***“தெய்வம் உணாவே மாமரம் புட்பறை***
***செய்தி யாழின் பகுதியோடு தொகைஇ***
***அவ்வகை பிறவும் கருவென மொழிப”[2]***

என்ற நூற்பாவின் வழி அறியலாம் ***“இந்தச் சொற்களானது கருப்பொருளின் அடிப்படையில் 12 புலங்களாகப் பிரிக்கப்பட்டு அவை பாகுபாடு செய்யப்பட்டுள்ளது.”[3]*** அவை,

1. தெய்வப் பெயர் தொகுதி
2. மக்கள் பெயர் தொகுதி
3. விலங்கினப் பெயர்த்தொகுதி
4. மரப்பெயர்த் தொகுதி
5. இடப்பெயர்த் தொகுதி
6. பல்பொருள் பெயர்த் தொகுதி
7. வடிவப் பெயர்த் தொகுதி
8. பண்புப் பெயர்த்தொகுதி
9. செயல் பற்றிய பெயர் தொகுதி
10. ஒலி பற்றிய பெயர்த் தொகுதி
11. ஒரு சொல் பல்பொருள் பெயர்த் தொகுதி
12. பல்பொருள் கூட்டத்து ஒரு பெயர்த் தொகுதி

என்பது திவாகர நிகண்டில் காண முடிகிறது.

**சொற்புல அமைப்பு**

***“பல்வேறு வகையான சொற்களைப் பல்வேறு பொருட் புலங்களின் கீழ் நிகண்டுகள் தொகுத்து வழங்கியுள்ளது. நிகண்டுகளில் இடம்பெறும் இப்பொருள் பாகுபாட்டினைச் சொற்பொருண்மை அடிப்படையில் மூன்று பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம். அவை,***

1. ***ஒரு சொல் பல்பொருள் பெயர்த் தொகுதி***
2. ***ஒரு பொருள் பல் பெயர்த் தொகுதி***
3. ***பல்பொருள் கூட்டத்து ஒரு பெயர்த்தொகுதி***

***என்பனவாகும்.”[4]***

**பொருட்புல உறவுகள்**

சொற்கள் தம்முடன் கொண்டிருக்கும் உறவுமுறைக்கு பொருட்புல உறவு எனலாம். இவற்றை ஒரு புலத்தின் கீழ் அடக்குகின்ற பொழுது சொற்கள் அனைத்தும் ஓர் உறவு பெற்றிருப்பதை உணரமுடிகின்றது. தமிழில் பொருள் என்ற சொல்லுக்குப் பல பொருள்கள் உள்ளன. இச்சொல்லானது வேற்றுமை பொருள், எச்சப்பொருள், என்று சொல்லின் இலக்கணப் பொருளையும், பொருண்மை என்னும் சொற்பொருளையும் குறிக்கின்றது. சொற்பொருண்மை அடிப்படையில் பொருள் இரண்டு வகையாக அமைந்துள்ளது.

1. சொற்பொருட் கூறுகள்
2. பொருள் உறவுச்சொற்கள் என்பனவாகும்.

**பொருட்புலங்கள்**

***“பொருட்புலங்களின் தன்மையும், எண்ணிக்கையும் மொழிக்கு மொழி மாறும் தன்மையுடையது என்பதால் பொருட்புலங்களும் சொற்களையும் வரையறுக்கப்பட்டுள்ளது. ஆனாலும் தமிழில் இடம்பெறும் இன்றியமையாத பொருட் புலங்களாக எஸ். சித்திரபுத்தன் குறிப்பிட்டுள்ளார்.”[5]***

1. உறவுமுறை
2. தாவரங்கள்
3. விலங்குகள்
4. மதம், சடங்குகள்
5. ஆடை
6. குடியிருப்பு
7. பாத்திரம், வீட்டுச் சொற்கள்
8. அரசியல்
9. தின்பண்டம்
10. உணவு வகைகள்
11. நோய், மருத்துவம், மருந்து
12. ஒப்பனை, அழகுப்பொருட்கள்

13. போக்குவரத்து, ஊர்தி
14. சிற்பம்,கட்டிடம்
15. வியாபாரம்
16. பருவநிலைகள்
17. செய்தித்தொடர்புகள்
18. வியாபாரம்
19. போர், படை
20. விளையாட்டு,பொழுதுபோக்கு
21. நிறங்கள்
22. அளவைகள்
23. மக்கட்பெயர்
24. கருவிப்பெயர்
25. உறுப்புப்பெயர்
26. எண்ணுப்பெயர்
27. உலோகம்
28. விழா,பண்டிகை,சடங்கு
29. அறிவியல்
30. சிறப்புப்பெயர்
31. ஐம்பூதங்கள்
32. குணம்,பண்புப்பெயர்கள்

இப்பொருட் புலங்கள் பெரும்பான்மையானவை எல்லா நிகண்டுகளிலும் இடம்பெற்றுள்ளன.

**பொருள் உறவுச்சொற்கள்**

***“சொல்லானது அவை வழங்குகின்ற சூழலுக்குத் தகுந்தாற்போல் பல பொருள் கூறுகளைப் பெறுகின்றது. அந்தச் சொற்களானது பொருள் உறவு அடிப்படையில் நான்கு வகைப்படுகின்றன[6]”***

1. ஒரு பொருள் பல சொல்
2. பல பொருள் ஒரு சொல்
3. எதிர்ச்சொல்
4. மீச்சொல் கீழ்ச்சொல்

என்பனவாகும்.

**முடிவுரை**

புலச்சொற்களானது சொல் அடிப்படையிலும், பொருள் அடிப்படையிலும்மேற்கொள்ளப்பட்டு ஒற்றுமை அடிப்படையில் தொகுக்கப்படும் சொற்கள் அல்லது சொற்தொகுதியை புலச்சொல்தொகுதி எனலாம்.நிகண்டுகளின் பதிவமைப்பானது தொல்காப்பியர் சுட்டிய மரபைப் பின்பற்றி அமைக்கப்பட்டது. நிகண்டுகள், பொருட்புலங்களின் அடிப்படையில் பெரும்பான்மையாக ஒத்திருப்பவை ஒரு சில பகுதிகள் மட்டும் தொகுப்பாளரின் நோக்கத்திற்கு ஏற்ப மாறுபடலாம்.

**சான்றெண் விளக்கம்**

1. வ.த.இராமசுப்ரமணியம். ஐங்குறுநூறு மூலமும் உரையும் - பக் -1
2. இளம்புரணர், தொல்காப்பியம், பொருளதிகாரம், அகத்திணையியல் - பக் -16
3. சுந்தர சண்முகனார், தமிழ்அகராதிக்கலை - பக் -72-73
4. தமிழ் நிகண்டுகள் உள்ளடக்கம் வரலாறும் - பக் -105
5. எஸ்.சித்திரபுத்தன் சங்கத்தமிழ் உறவுமுறைச் சொற்கள் தொகுப்பும் ஆய்வும் - பக்-64
6. மா. பார்வதியம்மாள் தமிழில் நோக்கு நூல்கள் - பக் -34

## துணைநூற்பட்டியல்

| | | |
|---|---|---|
| 1. | இராமசுப்ரமணியம் வ.த., | - ஐங்குறுநூறு மூலமும் உரையும்<br>மணிவாசகர் நூலகம்<br>31.சிங்கர் சன்னதி தெரு, சென்னை, 2015 |
| 2. | இளம்புரணர் (உ.ஆ) | தொல்காப்பிய பொருளதிகாரம்<br>சாரதா பதிப்பகம். சென்னை, 2011. |
| 3. | சுந்தர சண்முகனார் | தமிழ் அகராதிக்கலை<br>மெய்யப்பன் தமிழாய்வகம்<br>53,புதுத்தெரு, சிதம்பரம், 2011. |
| 4. | சித்திரபுத்தன் அ.,<br>திருநாவுக்கரசு இரா.,<br>பார்வதியம்மாள் மா., | தமிழ் நிகண்டுகள் உள்ளடக்கமும் வரலாறும்<br>அகராதியியல் துறை<br>தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர். |
| 5. | சித்திரபுத்தன் எஸ்., | சங்கத்தமிழ் உறவுமுறைச் சொற்கள்<br>தொகுப்பும் ஆய்வும்<br>உலகத்தமிழ் ஆராய்ச்சி நிலையம் சென்னை. |
| 6. | பார்வதியம்மாள் மா., | தமிழில் நோக்கு நூல்கள்<br>தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர். |